




கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (20.12.2025) திருநெல்வேலியில், அ.தி.மு.க.வைச் சார்ந்த இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் பேரூர் கழகச் செயலாளர் கே.எம்.ஏ. சீமான் மரைக்காயர், மாவட்ட கழக பிரதிநிதி எல். சீனி காதர் முகைதீன், மாவட்ட மீனவர் பிரிவு இணைச் செயலாளர் எம். அபுபக்கர், தகவல் தொழில்நுட்பப் பிரிவு இணை செயலாளர் கே.எம்.ஏ.எஸ். ஹமீது அப்துல் ரகுமான் மரைக்காயர் மற்றும் நிர்வாகிகள் தங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். உடன் அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம், முன்னாள் அமைச்சரும், கழக இலக்கிய அணித் தலைவருமான அன்வர் ராஜா ஆகியோர் உள்ளனர்.

### ‘கலைஞர்’ செய்திகள் தொலைக்காட்சி பிரிவுத் தலைவர்

# ப.திருமாவேலன் எழுதிய மூன்று நூல்கள்! முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டு சிறப்புரை!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி – நூல்களைப் பெற்றுக் கொள்கிறார்!

**சென்னை, டிச. 21-**

**‘கலைஞர் செய்திகள்’ தொலைக்காட்சி பிரிவுத் தலைவர் ப.திருமாவேலன் எழுதிய மூன்று நூல்களை, கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுச் சிறப்புரையாற்றுகிறார்.**

**அந்நூல்களின் முதற்படிகளை திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் பெற்றுக் கொண்டு வாழ்த்தி உரையாற்றுகிறார்.**




இவ்வினிய விழா பற்றிய விவரம் வருமாறு:-

‘கலைஞர் செய்திகள்’ தொலைக்காட்சிப் பிரிவுத் தலைவரும் எழுத்தாளருமான ப.திருமாவேலன் - “தீரர்கள் கோட்டம் தி.மு.க.” - “திராவிட அரசியல் - திராவிட அரசு இயல்” - முறை செய்து காப்பாற்றும் முதலமைச்சர்” ஆகிய மூன்று நூல்களை எழுதியுள்ளார்.

இந்நூல்களின் வெளியீட்டு விழா நாளை (22.12.2025 - திங்கள் கிழமை) மாலை 6.00 மணி அளவில் சென்னை - கோட்டூர்புரம் - பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் - கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு, விழாவுக்குத் தலைமை வகித்து, ப.திருமாவேலன் எழுதிய மூன்று நூல்களையும் வெளியிட்டுச்சிறப்புரையாற்றுகிறார்.

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள், அந்நூல்களைப் பெற்றுக் கொண்டு வாழ்த்துரை வழங்குகிறார்.

மேலும் - ஒன்றிய முன்னாள் அமைச்சர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி.யும் வாழ்த்தி உரையாற்றுகிறார்.

முன்னதாக - திராவிடர் இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் - பேராசிரியர் சுப.வீரபாண்டியன், நூல் அறிமுகவுரையாற்றுகிறார்.

கருஞ்சட்டைப் பதிப்பகத்தின் இயக்குநர் பெல்.கு.ராஜன், கவிதா பப்ளிகேஷன்ஸ் சேது சொக்கலிங்கம் உள்ளிட்டோரும் இவ்விழாவில் கலந்து கொள்கிறார்கள்.

